**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்</u>**

அசல் வழக்கு எண்.258/2020

நாள்: 11.03.2026

பி.வா.சா. 1 – பன்னீர் செல்வம்

2026–ம் ஆண்டு மார்ச் 11–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து ஆதியில் 26.12.1924 ல் முத்துகுமாரசாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து பழைய சர்வே எண்.347/9,10–ல் கட்டப்பட்டது என்றால் தெரியாது. 347/8–ல் கட்டுப்பட்டது. தாவா சொத்து எங்களது வகையறாவுக்கு எப்படி கிடைத்தது என்றால் என் தாத்தா சுப்பிரமணிய செட்டியார் கிரையம் வாங்கிய சொத்து. சுப்பிரமணிய செட்டியார் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் வேலாயுத பத்தரிடம் இருந்து கிரையம் வாங்கினார். வேலாயுத பத்தர் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் முத்துகுமாரசாமி பத்தரிடமிருந்து ஒரு பகுதியையும் துரைசாமி பத்தர், செல்லமாள் ஆகியோரிடமிருந்து ஒரு பகுதியையும் கிரையம் வாங்கினார். முத்துகுமாரசாமி பத்தரிடமிருந்து தென்வடல் 58 அடி கீழ்மேல் 23 அடி. துரைசாமி பத்தர், செல்லமாள் ஆகியோரிடமிருந்து 8 1/2 அடி கிரையம் வாங்கினார். முத்துகுமாரசாமி பத்தரிடமிருந்து வாங்கிய சொத்தின் நான்கெல்லை தெரியாது. முத்துகுமாரசாமி யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்று தெரியாது. தாவா சொத்தின் புதிய சர்வே எண்.584/9 மற்றும் 10. சர்வே எண்.347/8–ல் கட்டப்பட்ட சொத்து தான் புதிய சர்வே எண்.584/9 மற்றும் 10 என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பி.வா.சா.ஆ.8

மனைவரி பட்டா தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.8–ல் புதிய சர்வே எண் 584/9 என்றும் பழைய சர்வே எண்.347/10 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.347/8 இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 பட்டா எனது மகன் 3ம் பிரதிவாதி பிராசாத்குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் கூறியுள்ள 15.08.1929, 17.10.1929, 18.02.1936 ஆகிய பத்திரங்களில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. முத்துக்குமாரசாமியிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்திற்கு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லை எனக்கு தெரியாது. 17.10.1929, 15.08.1929 தேதிய கிரைய பத்திரங்களில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது ஞாபகமில்லை. முத்துகுமாராசாமி பத்தர் வாங்கிய 26.12.1924 கிரைய பத்திரத்திற்கும், வேலாயுத பத்தர் வாங்கிய 15.08.1929, 17.10.1929 தேதிய கிரைய சொத்திற்கும் சம்மந்தில்லை என்றால் சரியல்ல. 18.02.1936 தேதிய கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தானது, 17.10.1929 தேதிய கிரைய பத்திரத்திற்கு கீழ்புற சொத்து என்றால் சரியல்ல. தையல்நாயகி கோவிந்தசாமிக்கு எழுதி வைத்த உயிலில் பழைய சர்வே எண்.347/8–ல் கண்ட சொத்துதான் கோவிந்தசாமிக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தை தான் தனது மகன்கள் கோதண்டபாணி, சிங்காரவேல் ஆகியோருக்கு கொடுத்த சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை தான் அவர்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். கோதண்டபாணி, சிங்காரவேல் பாகம் பிரித்துக் கொள்ளும் போது தான் சிங்காரவேலுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் பழைய சர்வே எண்.347/8–ல் கட்டுப்பட்டதாக நினைத்துக் கொண்டு தாவா சொத்து அவரது பாகத்திற்கு தவறாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தையல் நாயகி எழுதிவைத்த உயிலில் கண்ட சொத்துக்கு நான்கெல்லை என்னவென்றால்

சாமுண்டீஸ்வரி கோவில் மதில் சுவருக்கும் வடக்கு, தென்வடல் வீதிக்கும் கிழக்கு, கேசவ செட்டியார் வீட்டிற்கும் தெற்கு, ராஜகோபல் பத்தர் வகையறா மனைக்கும் மேற்கு. அதன் நீளம் தென்வடல் 58 அடி கீழ்மேல் 31 1/2 அடி. மேற்கண்ட சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. முத்துகுமாரசாமி வாதி கலியபெருமாளுக்கு என்ன உறவு என்றால் தெரியாது. முத்துகுமாரசாமியின் அப்பா பெயர் சங்கர் பத்தர் என்றால் தெரியாது. சங்கர் பத்தர் சொத்துக்கு தென்புறம் உள்ள சொத்தை தான் முத்துகுமாரசாமி பத்தர் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. செல்லத்தம்மாள் முத்துகுமாரசாமி பத்தருக்கு என்ன உறவு என்றால் தெரியாது. செல்லத்தம்மாளின் கணவர் பெயரில் ஞாபகமில்லை. புதிய சர்வே எண்.584/8 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சேகர் பெயரில் உள்ளது. சர்வே எண்.584/7 யார் பெயரில் உள்ளது என்றால் செந்தில்குமார் பெயரில் உள்ளது. தாவா சொத்து உள்ள இடத்தை வாதிகள் தான் ஆடு, மாடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சுவற்றை இடித்து அத்துமீறி வந்து ஆக்கிமித்துக் கொண்டார்கள். தாவா சொத்தில் மேற்கூரை இல்லை என்றால் சரிதான். தற்போது மேற்கூரை இடிந்து போய் உள்ளது. சர்வே எண்.584/9, 10 வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் அந்த சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் பழைய சர்வே எண்.347/8–க்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சிங்காரவேலு எனக்கு தாய்மாமன். அவர் நலமாக தான் உள்ளார். அவரை என் தரப்பில் விசாரிக்க உள்ளேனா என்றால் தேவையில்லை. 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் தவறாக தாவா சொத்தையும் சேர்த்து பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றாலும் அதன் பிறகு என் மகன் பெயரில் 1ம் பிரதிவாதி கிரையம் எழுதி கொடுக்க உரிமையில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின்கட்டண

இரசீதுகள், வீட்டு வரி மற்றும் குடிநீர் இரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.21 வில்லங்க சான்றிதழ் சர்வே எண்.347/8–க்கு எடுக்கப்பட்டுள்ளது என்றாலும் வாதியின் சொத்துக்கு எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் பாகம் பிரித்துக்கொள்வதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் வாதிகள் அனுபவத்தில் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் நான் தாக்கள் செய்துள்ள எதிரிடை கோரிக்கையில் கூறியுள்ள விளம்புகை பரிகாரமும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை முத்துகுமாரசாமி கிரையம் வாங்கிய காலத்தில் இருந்து வாதியின் வகையறா அனுபவம் செய்வதாலும், அனுபவ பாத்தியம் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள் எதிரிடை கோரிக்கை பரிகாரம் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.